மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் அங்கத்தினர் கோரியது குறித்து பரிசீலனைசெய்து 26-4-1968 அன்று அவருக்குத்தக்க பதில் அனுப்பப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இது பம்பாய்க் கம்பெனியிலிருந்து தயாராகி வரக்கூடிய ஒருவிதமான மஞ்சள் கலர். இதை உணவுக்கோ, அல்லது பலகாரங்களுக்கோ மிட்டாய்கடைகளில் உபயோகப்படுத்துகிறார்கள். இதை உபயோகப்படுத்தியதற்காக வேண்டி சில வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்கும்போது, இதைக் கடைகளிலேயே விற்கக் கூடாது என்கிற அளவுக்குத் தடை விதிக்க வேண்டுமேயல்லாது, உபயோகப்படுத்திய பிறகு நடவடிக்கை எடுக்கக் கூடாது. அதற்கான ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இந்த மெட்டனில் எல்லோ என்கிற மஞ்சள் நிற வண்ணம் தடை செய்யப்படவில்லை, ஆனால், இந்த மெட்டனில் எல்லோ என்கிற வண்ணம் உணவில் கலப்படம் செய்யப்பட்டால் பாதகம் ஏற்படுமா என்பதற்கு இப்பொழுது பரிசீலனை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதைக் கலப்பதால் பாதகம்தான் ஏற்படும் என்ற முடிவு ஏற்படுமானால், அதன் பிறகுதான் அதைத் தடை செய்ய முடியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல், வேறு யார்மீதும் இத்தக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் விளைவாக நடவடிக்கை எடுத்ததைப் பற்றியோ அல்லது தண்டனை கொடுத்ததைப் பற்றியோ அரசாங்கத்திற்கு எந்தவிதத் தகவலும் இருக்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அரக்கோணத்தில் ஒரு மிட்டாய்க் கடைக்காரர் மீது சானிடரி இன்ஸ்பெக்டரே நடவடிக்கை எடுத்து, அபராதம் விதித்திருக்கிறார். ஆகையால், தயவு செய்து அந்த முனிசிபாலிடியில் அது பற்றி விசாரணை நடத்தி, அது விஷயமாக அந்த சானிடரி இன்ஸ்பெக்டர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த மெட்டனில் எல்லோ என்ற வண்ணம்தான் கலக்கப்பட்டது என்பது கூட விவரம் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இதிலெல்லாம் பரிசீலனை செய்துதான் பதில் சொல்ல முடியும்.

வெள்ளியணைக்கு மருத்துவ மனை.

* 139 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் வெள்ளியணையில் ஒரு மருத்துவ மனை துவக்க வேண்டும் என கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) வெள்ளியணை கிராம மருத்துவ மனையை ஒழுங்கான மருத்துவ மனையாக மாற்ற 19-3-1965 தேதியன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பழங்குடி மக்கள் நலன் குறித்த ஆய்வுக்குழு

* 140 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் தேதியளவில் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்ட ஆய்வுக் குழு அமைச்சரைச் சந்தித்துப் பேசியதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) இம்ம நிலத்தில் பழங்குடி மக்கள் நலன் குறித்து அந்த ஆய்வுக் குழு விவாதங்கள் நடத்தியது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கு இந்த அரசிடம் என்ன சிறப்புத் திட்டங்கள் இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முதலில் கேட்கப் பட்ட கேள்வி வேறு. போடப்பட்ட துணைக் கேள்வி வேறு. இதற்குத் தனி யாக கேள்வி போடவும்.

Midget railway in Madras Zoo

* 141 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is proposed to introduce a midget railway for children inside the zoo;

(*b*) if so, the details thereof; and

(*c*) the other improvements that are being proposed for the zoo?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 10 தொடர் வண்டிகளையும் ஒரு டீசல் எஞ்சினையும் கொண்டதும் 60 இளஞ்சிறுர்களை ஏற்றிச் செல்லத்தக்கதுமான ஒரு சிறிய இரயில் வண் டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதை அமைத்துப் பணி வருவ தற்கென மொத்தம் ரூ. 4,30,000 செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

(உ) மேற்கொண்டும் கீழ்க்கண்ட மேம்பாடுகளை மிருக காட்சி சாலையில் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) சிறிய இரயில் செல்கிற வழி நெடுகவுள்ள கூண்டுகளின் முகப்புப் பகுதிகளை மாற்றியமைத்தல் ;

(2) சிறிய இரயிலில் செல்கிற இளஞ்சிறுர்கள் வேடிக்கை காண் பதற்கான சிற்பக்கலை வேலைப்பாடுகளுக்கு அழகூட்டுதல் ;

(3) சில பாலூட்டி விலங்குகளையும், பறவைகளையும், கூடுதலாக வாங்குதல்; இவற்றைத் தருவிக்க ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட மேம்பாடுகளைச் செய்ய ரூ. 25,700 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM: Is it not a fact that there was a complaint from the authorities of the Zoo that the animals become allergic when they hear the noisy sound created by the railway that passes nearby and that there was a proposal to shift the entire zoo to the Raj Bhavan campus by acquiring some land? What happened to the proposal? Did not the Corporation put up some such proposal and is the Government not willing to accord sanction to the proposal?